12.03.2026

OS. No. 36/2023

**வா.சா.1 –** திருமதி. ரேவதி, க/பெ பழனிச்சாமி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :–**

என் அம்மா எனது வியபாரத்திற்கு என்ன விதத்தில் உதவி செய்வார் என்றால் எடை போட்டு கொடுப்பார். அதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. என் தகப்பனார் அவரது திருமணத்திற்கு முன்பும், பின்னும் தானே கடையை நடத்தி வந்தார். என் அப்பா மட்டும் தான் கடையை நடத்தி வந்தார் என்றும், என் அம்மா எந்த காலத்தில் உதவிச் செய்யவில்லை என்றால் என் அப்பாவிற்கு மார்க்கட் போகும் சமயங்களில் உதவி செய்வார். என் தகப்பனார் வழக்குச் சொத்தை என் அம்மாவின் தனிப்பட்ட வருமானம், தனிப்பட்ட நகைகள் மற்றும் சீர்வரிசைகள் கொண்டு தான் வாங்கினார் என்பதற்கு ஆதாரம் இல்லை. இந்த வழக்குச் சொத்தில் வீடு கட்ட உங்களது அம்மாவின் நகை மற்றும் பணத்தை கொடுத்ததாக எந்த ஒரு ஆவணமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வீடு கட்ட வாங்கிய கடனுக்கு அம்மாவின் பணம் மற்றும் நகைக் கொடுத்ததாக் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாத்தமங்கலத்தில் எனது அம்மா வீட்டின் பூர்வீகச் சொத்து விவரத்தை பாகம் பிரித்து என் அம்மாவின் பாகத்தை அவரது அண்ணன் விற்று அதில் வந்த தொகையை கொண்டு தான் வழக்குச் சொத்தை வாங்கியதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அம்மாவுடன் பிறந்தவர்கள் நான்கு இளைய சகோதரர்கள் மட்டும் என்றால் சரிதான். 27.10.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் எனது தகப்பனார் பழனிவேல் அவர்களுக்கு மட்டுமே அனுப்பட்டது என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு அந்த அறிவிப்பு அனுப்பட்டது என்றால் பாகப்பிரிவினை கோரி

அனுப்பப்பட்டது. வழக்குச் சொத்தினை பொறுத்து மட்டும் பாகம் கேட்டு மட்டும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. நான் பாகப்பிரிவினை கோரி அனுப்பிய அறிவிப்பை பார்த்த பிறகு தான் மேற்படி பழனிவேல் அவர்களுக்கு உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சில நாட்களில் உயிர் இழந்தார். வழக்கறிஞர் அறிவிப்பில் குறிபீடப்பட்டுள்ள சொத்தை பொறுத்து மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என் அப்பாவிற்கு மட்டும் தான் அறிவிப்பு அனுப்பினேன், பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பவில்லை. நான் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பில் தங்களது தாயார் பிரேமா அவர்கள் 03.07.2018ம் தேதியன்று இறந்தார் என்று குறிபீடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயார் உயிருடன் இருந்த காலத்தில் சொத்தில் பாகம் கேட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்தை என்னுடைய தாயார் உடையதாக சொத்தாக இருந்திருந்தால் அதை பொறுத்து அப்போதே பாகம் கோரி நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adopt